**இலங்கை துறைமுக அதிகார சபை - 2018**

---

1.1 **முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்**

---

இலங்கை துறைமுக அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று உரிமை மூலதன மாற்றங்களின் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள், சாராம்சப் படுத்தியுள்ள முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளைக் கொண்டமைந்துள்ள 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி எனது பணிப்பின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிகார சபையின் நிதிக் கூற்றுகள் தொடர்பாக நான் அபிப்பிராயம் தெரிவிக்க வில்லை. அபிப்பிராயம் மறுதலிப்பதற்கான அடிப்படை பகுதிகளில் கலந்துரையாடியுள்ள விடயங்களில் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக் கூற்றுகள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் பொருட்டு போதியளவிலும் பொருத்தமான கணக்காய்வு சாட்சிகளையும் பெற்றுக்கொள்வறத்கு எனக்கு இயலவில்லை.

1.2 **முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின்மீது எனது மறுதலிப்பதற்குள்ள அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுதழிப்பதற்கான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 **நிதிக் கூற்றுகள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனுடன் தொடர்புடைய தரப்புகளதும் பொறுப்புகள்**

---

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகார சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆவதுடன், முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தைஅதிகார சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்தல் மற்றும் அதிகார சயையின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு ஏற்புடையதான விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றுக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள், பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 **கணக்காய்வு விடயவெல்லை (நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன்

தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுகளின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து அதிகார சயையின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,
- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.
- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,
- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கியொழுகாமை

| உரிய நியமத்தின் தொடர்புகளுடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இல் 20 ஆவது பந்தி பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றுகளை தயாரிக்கையில் எல்லா நிதிசாரா உருப்படிகளை வரிக்கு முன்னரான இலாபத்துடன் சீராக்குதல் வேண்டும். ஆயினும், மீளாய்விற்கான ஆண்டில் அதிகார சபையின் காசுப் பாயச்சல் தயாரிக்கையில் நிதிக் கூற்றுகளில் நிருவாக செலவினத்தின்கீழ் | குறை மற்றும் சந்தேகத்திற்கிடமான கடனாக ஒதுக்கீடு செய்வறத்கு ரூபா.113,638,189 ஆன தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நேரடி முறையின்கீழ் காசுப் பாய்ச்சல் கூற்றுகளை தயாரிக்கு-ம்போது தொழில்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்படும் காசுப் பாய்ச்சலினை கண்டறிவ-தற்கு நிதியல்லாத உருப்படிகளில் மாற்றங்-களுக்கு முன்னரான இலாபம் சீராக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| காட்டப்பட்டிருந்த ரூபா. 113,638,189 ஐ அறவிட முடியாக் கடனாகவும் சந்தேகத்திற்கிடமான கடனாகவும் ஒதுக்கீடு செய்திருந்த தொகையினை சீராக்கப்படவில்லை. | | |
| (ஆ) இலங்கை கணக்கீட்டு நியமங்கள் 16 இல் 51 ஆவது பந்திபடி நிலையான சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் சிதைவுப் பொருட்களின் பெறுமதி வருடாந்தம் மீளாய்வு செய்து மாற்றங்கள் ஏற்படுமாயின் அந்த மாற்றத்தினை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 பிராகரம் கணக்குகளில் சீராக்குதல் வேண்டுமாயினும், அதிகார சபைக்குரிய 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி தேறிய பெறமதி ரூபா. 86,019 மில்லியன் பெறுமதியிலான 06 வகை சொத்துக்கள் தொடர்பாக மீளாய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் சம்பந்தப்பட்ட 05 சொத்துக்களின் உருப்படிகள் பொருட்டு மீளாய்வு மேற்கொண்டுள்ளதுடன், இவ்வாறு மீளாய்வு செய்யும் நடைமுறை, நியமனம் செய்த குழுமூலம் தொடர்ச்சியாக பேணிச் செல்லப்படுமென நிதிக் கூற்றுகளுக்கான குறிப்பு இலக்கம் 53 மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (இ) 2017 ஆம் ஆண்டு நவம்பர் தொடக்கம் தொழில்பாட்டு நடவடிக்கைகளை நிறுத்தப்பட்டிருந்த அதிகார சபையினால் நிருவகிக்கப்படும் கம்பெனியான மாகம்புரய துறைமுகம் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனியால் தனியார் வங்கியொன்றில் பெற்றுக்கொண்டிருந்த அ.டொலர் 24 மில்லியன் கடன் தொகையினை அந்தக் கம்பெனியால் தீர்க்கப்படாதிருந்ததுடன், இந்த அறிக்கையின் திகதியாகும்போது கடன் தீர்ப்பதற்கு கம்பெனியிடம் போதியளவிலான பணம் இருக்கவில்லை. எவ்வாறாயினும், கடன் தொகை பொருட்டு பிணையாளராக இலங்கை துறைமுக அதகிரா சபைக்கு எதிராக நிலுவை கடன் மீதியான அ.டொ.22.3 மில்லியன் தொகை அறவிடுவதற்கு வழக்கு தொடருவதாக சம்பந்தப்பட்ட வங்கியால் உறுதிக் கேள்வி கடிதம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 02 ஆந் திகதி அதிகார சபையிடம் முன்வைக்கப்ப- | அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உறுதிக் கேள்வி கடிதம் கிடைக்கப்பெற்றுள்ளதுடன், அது தொடர்பாக தேவையான சட்டத்துடனான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | உரிய சட்டத்துடனான பின்னணி தொடர்பாக கவனத்தில் கொண்டு அதிகார சபையால் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

ட்டிருந்தது. மேலும் அதிகார சபையால் இதற்காக எதிர்பாரா பொறுப்புகளாக ஒதுக்கீடுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.5.2 இணக்கப்பாடின்றி கணக்குகளிலிருந்து அகற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ)அம்பாந்தோட்டை துறமுகம் நிருமாணிப்பதற்காக பெற்றுக்கொண்டிருந்த வெளிநாட்டு கடன் 2017 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆந் திகதியில் அதிகார சபையின் கணக்குகளில் எஞ்சியிருந்த ரூபா. 147,746 மில்லியன் தொகையிலான கடன்மீதியை, பொது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் அல்லது அமைச்சரவையின் அனுமதியின்றி அதிகார சபையால் நிதிக் கூற்றுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக அரசாங்கத்தில் எந்தவொரு கணக்கிலும் அந்தக் கடன் தொகை உள்ளடக்கப்படவில்லை. பொது திறைசேரியில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஆவணங்கள்படி, 2018 ஆம் அண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் இந்தக் கடன் மீதி ரூபா. 179,546 மில்லியன் ஆகியது. எவ்வாறாயினும், மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் இந்தக் கடன் கணக்கு வைத்தல் தொடர்பாக இரண்டு தரப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வரவில்லை.<br><br>மேற்படி கடன் தொகைக்கு ஏற்புடையதாக 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30 ஆந் திகதி வரையிலான காலப் பகுதிக்கு கணக்கிடப்பட்ட அந்நியச் செலவாணி மாற்றங்களின் நட்டம் ரூபா. 31,544 மில்லியன் தொகை ஆனதுடன், அதனை அதிகார சபையின் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், 2017 ஆம் ஆண்டு நவம்பர் 30 அந் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை அந்நியச் செலவாணி திரட்டிய நட்டமான ரூபா. 28,396 மில்லியன் தொகையும் அடங்கலாக, இந்த கடன் தொகை | இணங்கவில்லை.<br><br>அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு ஏற்புடையதாக வெளிநாட்டு கடன் உடன்படிக்கைகளை அரசு மற்றும் பொது திறைசேரி மேற்கொண்டுள்ளதுடன், அமைச்சரவை தீர்மானம்மூலம் கடன் மீள செலுத்தும் நடவடிக்கைகள் இலங்கை துறைமுக அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன்படி துறைமுக அதிகார சபையால் உரிய கடன் மற்றும் வட்டி செலுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>2017 ஆம் ஆண்டு யூலை மாதம் 25 ஆந் திகதி 17/1580/737/018 -II ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானம் (III) இன்கீழ் கடன் மீள செலுத்துவதற்குள்ள மொத்த மீதி பொது திறைசேரியால் வகிக்கப்படுமெனவும், அம்பாந்தோட்டை துறைமுகம் சார்ந்து கடன் தொகை தொடர்பான சேவை நடவடிக்கைகளை மேலும் இலங்கை துறைமுக அதிகார சபையால் நிறைவேற்றுதல் தேவையல்ல எனவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது. அதன்படி உரிய கடன் தொகை நிதிக் கூற்றுகளிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாக 2018.02.23 ஆந் திகதிய கடிதம்மூலம் திறைசேரியிடம் அறிவிக்கப்பட்டுள்ளது. | ஏற்புடைய விடயங்கள் தொடர்பாக பொது திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டு இறுதி இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| தொடர்பாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் கணக்குகளுக்கு உள்ளடக்கப்படாத திரட்டிய அந்நியச் செலவாணியின் மாற்றங்களின் நட்டம் ரூபா. 59,940 மில்லியன் தொகையாகும். | | |

1.5.3 **சீராக்கப்படாத கிடைக்கப்பெற வேண்டியவைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|
| அம்பாந்தோட்டை துறைமுகம் நிருமாணிக்கும் கருத்திட்டம் பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட கடனுக்கு அதிகார சபை 2017 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா. 5056 மில்லியன் தொகை அடங்கலாக 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா. 5149.9 மில்லியன் தொகை பொது திறைசேரியிடமிருந்து கிடைக்கப்-பெற வேண்டியவைகளாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருப்பினும், 2019 ஆம் ஆண்டு செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை அந்த பணம் நிதி அதிகார சபையிடம் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | உரிய பணத் தொகையினை மீண்டும் துறைமுக அதிகார சபையிடம் பெற்றுத் தருமாறு 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 30, 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 28 மற்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் 19 ஆகிய திகதிகளில் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், 2019 ஆம் ஆண்டு பெப்ருவரி 12 ஆந் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தின்போது பணிப்பாளர் சபை பத்திரம்மூலம் அறிவிக்கப்பட்-டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம்படி உரிய பணத் தொகையினை பெற்றுக்கொள்வத-ற்கான கலந்துரையாடலை மேற்-கொள்வதற்கு வாய்ப்பு வழங்கு-மாறு துறைமுகம், கப்பற்றுறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் செயலாளரால் திறைசேரி செயலாளரிடம் 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ஆந் திகதி கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | கிடைக்கப்பெற வேண்-டியவைகளை அறவிடு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

1.6 **கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்**

1.6.1 **கிடைக்கப்பெறுவனவைகள்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|

| | | |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் 30 நாட்களைக் கொண்ட கடன் காலவெல்லை விஞ்சிய, கப்பற் முகவர் கடனாளிகளின் மீதி ரூபா. 793,273,839 ஆகியது. அது முழுமொத்த கப்பற் முகவர் கடனாளிகளின் மீதியில் 28% ஆகியது. | 30 நாட்களை விஞ்சிய கடனாளிகளின் மீதி பின்வருமாறாகும்.<br>கொழும்பு துறைமுகம் ரூபா. 756,924,136.35<br>திருகோணமலை துறைமுகம் ரூபா. 2,041,423.74<br>காலி துறைமுகம் ரூபா. 34,308,279.55<br>ரூபா 793,273,839.64<br>============ | கடன் காலவெல்லை விஞ்சிய கடனாளிகளின் மீதி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

1.7 **சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| **சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர்பு** | **இணங்கியொழுகாமை** | **முகாமைத்துவத்தின் அபிப்பிராயம்** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ)1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 11 ஆம் பிரிவு மற்றும் 2003 ஆம் ஆண்டு யூன் 02 ஆந் திகதிய இல பீஈடீ 12 எனும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.2.2 ஆம் பிரிவு | 2018 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அதிகார சபையினால் நிலையான மற்றும் குறுகியகால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா 35,935 மில்லியன் தொகைக்கு நிதி அமைச்சரின் அனுமதி பெறப்படவில்லை. | இணங்கவில்லை.<br>2018 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட வைப்புத் தொகைக்காக திறைசேரி செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சின் செயலாளரினால் கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதோடு, ஏற்புடைய அனுமதியினைப் பெற்றுக்கொள்வது எமது கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதாகும். | சட்டரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் நிலையான வைப்புக்களில் நிதி முதலீடுகளை செய்வதற்கு முன்னர் நிதி அமைச்சரின் அனுமதி பெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| (ஆ)1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் 10(5) ஆம் பிரிவு | அரசாங்க கூட்டுத்தாபனமொன்றின் ஏதேனுமொரு ஆண்டில் மிகை இருப்பின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி கழிப்பனவுகளை செய்த பின்னர் மீதியை திரட்டு நிதியத்தில் வைப்புச் செய்தல் வேண்டும். ஆயினும், 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை அதிகார சபையினால் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் ரூபா | இணங்கவில்லை.<br>இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்திற்கு அமைய இலங்கை துறைமுக அதிகார சபையை நிறுவும் போது அரசாங்கத்தினால் மேற்கொண்ட மூலதனத்தில் (Equity Capital) 8% உச்சவெல்லைக்கு உட்பட்ட வகையில் பங்கிலாபத்தினை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வா- | அரசாங்க கூட்டுத்தாபனம் ஒன்றில் ஏதேனும் வருடத்தில் மிகை இருப்பின் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கழிப்பனவுகளை செய்த பின்னர் மீதியை திரட்டு நிதியத்தில் வைப்பிலிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளதனால் நிதிச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மிகை நிதி திரட்டு நிதியத்தில் |

| | | | |
|---|---|---|---|
| | 18,607.12 மில்லியன் தேறிய இலாபம் திரட்டு நிதியத்தில் வைப்பிலிட-ப்படவில்லை. மேலும், மேற்படி இலாபத்-திற்குள் நீண்டகால குத்தகை அடிப்படை-யில் தனியார் துறைக்கு வழங்கப்-பட்டிருந்த தெற்காசிய பிரவேச தளம் (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் தளம் (CICT) ஆகியவற்றின் செயற்-பாட்டு நடவடி-க்கைகளில் ஈடுபட்டுள்ள இரண்டு கம்பனிகளிடமிருந்து அதிகார சபையினால் 2016 தொடக்கம் 2018 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட்டிருந்த தொகை மொத்தம் ரூபா.5,989 மில்லியன் தொகையும் குத்தகைக் கூலி மற்றும் அக்காலப் பகுதிக்கான அரசாங்-கத்தின் பங்காக அறவிடப்பட்ட தொகை மொத்தம் ரூபா 7,617 மில்லியன் தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது. இந்த இலாபம் துறைமுக அதிகார சபையின் நேரடி செயற்பாட்டு வருமானம் அல்ல என்பது அவதானிக்கப்பட்டது. | றெனினும், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் இலங்கை துறைமுக அதிகார-சபைக்கு பங்கிலாபத்தை செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக 2018.04.24 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகார சபையினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்ட-ங்களுக்காகப் பெற்றுக்-கொள்ளப்பட்ட கடன் தொகைகளை தீர்ப்பதற்கு இலங்கை துறைமுக அதிகார சபையினா-லேயே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே, இந்த விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளது.<br><br>SAGT மற்றும் CICT தளங்களின் மூலம் கிடைக்கப்பெற்ற வருடாந்த குத்தகைக் கூலி மற்றும் அரசாங்க பங்கு நேரடி செயற்பாட்டு வருமானத்தின் கீழ் அல்ல வேறு செயற்பாட்டு வருமானத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. | வைப்பிலிடுதல் வேண்டும். |
| (இ)2015 மே 25 ஆந் திகதிய இல பீஈடீ 1/2015 அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 2.3 மற்றும் 3.1 பிரிவுகள் | மாதிரி பரிசோதனையின் போது அடையாளம் காணப்பட்ட வகையில் சுற்றறிக்கை ஏற்பாடு-களுக்கு புறம்பாக மாதாந்த எரிபொருள் கொடுப்பனவாக 135 உத்தியோகத்தர்களுக்கு மீளாய்வுக்குரிய வருடத்தின் திசெம்பர் மாதத்தில் மட்டும் எரிபொருள் லீட்டர் 10,764 வழங்கப்ப-ட்டிருந்தது. | இந்த கொடுப்பனவுகளை செலுத்துவது தொடர்பில் அரச தொழில் முயற்சிகள் திணைக்-களத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக கடிதமொன்று அனுப்பி-வைக்கப்பட்ட போதிலும் அதற்கான அனுமதி இது வரையில் கிடைக்கப்பெறவில்லை. | அமுலிலுள்ள சுற்ற-றிக்கைகளின் ஏற்பா-டுகளுக்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) 2016 ஏப்ரல் மாதம் 29 ஆந் திகதிய இல ஈபீடீ 03/2016 எனும் அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை. | உழைக்கும்போது செலுத்தும் வரி, தனிப்பட்ட சம்பளத்திலிருந்து கழித்து செலுத்த வேண்டியிருப்பினும் அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு அந்த அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டுக்கு அவ்வாறு செலுத்தப்பட்ட ரூபா.479 மில்லியன் தொகையையும் உள்ளடக்கி 2011/2012 விலைமதிப்பு வருடத்திலிருந்து 2018 திசெம்பர் மாதம் வரை மொத்தம் ரூபா.2,841 மில்லியன் தொகை உழைக்கும் போது செலுத்தும் வரி அதிகாரசபை நிதியத்திலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | இலங்கை துறைமுக அதிகார சபையின் ஊழியர்களுக்காக உழைக்கும் போது அறவிடப்படும் வரி செலுத்தல்கள் 1997 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதோடு, இது வரையில் மாதாந்தம் அறவிடப்படுகின்றது. இந்த நிலைமை தொடர்பில் அப்போதைய பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரதி இணைக்கப்பட்டுள்ளது.<br><br>மேலும், இந்த கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்ட போது எமக்கு கிடைக்கப்பெற்ற கணக்காய்வு ஐயப்பாட்டின் பிரதியொன்று பொது திறைசேரிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்ததனால் இது தொடர்பில் பொது திறைசேரியின் அரச நிதிக் கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் எழுத்துமூலமான அனுமதி அளிக்கப்பட்டுள்ளதோடு, வரிக்காக வரி செலுத்துவதாயின் தொழில் வழங்குநரால் வரித்தொகையை செலுத்துவது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு ஆட்சேபனை கிடையாதென ஏற்புடைய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கு அமைய இந்தக் கொடுப்பனவுகள் உத்தியோகத்தர்களால் செலுத்தப்படல் வேண்டும். |
| (உ) 2011 மார்ச் மாதம் 07 ஆந் திகதி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2015 யூலை மாதம் 06 ஆந் திகதிய இல எஸ்ஈசீ/2015/05 எனும் சுற்றறிக்கை | அரசாங்க நிறுவனங்களில் தொழிலில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கும் போது அதன் உழைப்பு மீதான வரி கழிக்கப்பட வேண்டியிருப்பினும் அந்த வரி ஊழியர்களிடமிருந்து அறவிடப்படாமல் அதிகார- | தற்போது ஊழியர்களுக்கான உழைப்பு மீதான வரி தொடர்பில் சாதகமான தீர்மானமொன்றை எடுப்பதற்காக மனிதவளப் பிரிவின் உத்தியோகத்தர்களை உள்ளடக்கி குழுவொன்றை நியமிப்பதற்கு பணிப்பாளர் சபையினால் தவிசாள- | சுற்றறிக்கையின் பிரகாரம் உழைப்பின் மீதான வரி செலுத்தப்படல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | சபையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டிருந்தது. | ருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளதோடு, அந்தக் குழு தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி செலவைக் குறைப்பதற்கான யோசனையொன்றை பணிப்பாளர் சபைக்கு முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஊ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய இல ஐஏஐ/2002/2 எனும் திறைசேரி சுற்றறிக்கை | அதிகாரசபையின் செலவினமான ரூபா.452 மில்லியன் பெறுமதியான கணினி, துணைக்கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படவில்லை. | தகவல் கட்டமைப்பு பிரிவினால் கணினி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பில் மீண்டும் ஆய்வொன்றை மேற்கொண்டு கணினி சொத்துக்கள் பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளதோடு, அதனை நிதிப் பிரிவின் சொத்துக்கள் பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யப்படுகின்றது. | கணினி மென்பொருட்களுக்கான தனியான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்படல் வேண்டும். |
| (எ) 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 40(1) மற்றும் (3) பிரிவுகள், 2009 ஒக்டோபர் 01 ஆந் திகதிய இல டீஎம்ஏ/2009 (3) எனும் முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றறிக்கை மற்றும் இலங்கை அரச துறை நிறுவனங்களுக்கான உள்ளக கணக்காய்வுத் தரங்கள் இல 1110.A1 | உள்ளக கணக்காய்வின் சுயாதீனத்தன்மையை பாதுகாக்கும் வகையில் உள்ளக கணக்காய்வு அறிக்கை ஆளுகை சபைக்கு சமர்பிக்க வேண்டியிருப்பினும் அதிகாரசபையின் உள்ளக கணக்காய்வு அறிக்கை ஒவ்வொரு பிரிவுத் தலைவர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. | இணங்கவில்லை.<br><br>இலங்கை துறைமுக அதிகாரசபையின் இணைந்த திட்டம் மற்றும் நிறுவனக் ஒழுங்கமைப்பில் (Organizational Chart) தெளிவாக பிரதான உள்ளக கணக்காய்வாளர் சுயாதீனமாக செயற்படும் வகையில் நேரடியாக தவிசாளருக்கு பொறுப்புக்கூறும் பதவியொன்றாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு, அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் பிரகாரம் அந்தப் பதவியின் சுயாதீனத்தன்மைக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றேன். | உள்ளக கணக்காய்வின் மூலம் ஆற்றப்படும் கணக்காய்வு நடவடிக்கைகளை தவிசாளர் அறிந்துகொள்வதற்கும் சரிசெய்யப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் தவிசாளரின் கவனம் செலுத்தப்படுவதற்கும் உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் தவிசாளரிடம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) 2003 யூன் 02 ஆந் திகதிய இல பீஈடி/12 எனும் அரசாங்க தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 பிரிவு | அதிகாரசபையின் ஆட்சேர்ப்புத் திட்டம் 2019 ஏப்ரல் மாதம் 30 ஆந் திகதி வரையில் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தை தயாரிக்கும் போது அடையாளம் காணப்பட்ட பலவீனங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | முறையான ஆட்சேர்ப்புத் திட்டமொன்றை தயாரித்து ஏற்புடைய அனுமதியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஐ) 2018 யூலை 18 ஆந் திகதிய இல 03/2018 எனும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் சுற்றறிக்கை | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக 2018 ஆம் ஆண்டு அதிகாரசபையின் 560 உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 17,700 முதல் ரூ. 31,150 வீதம் சம்பளம் அதிகரிக்கப்பட்டிருந்தது. | திறைசேரியின் அவதானிப்புக்களை கருத்திற்கொண்டு கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு பணிப்பாளர் சபை தீர்மானமொன்றை எடுத்துள்ளதோடு, 2018.07.02 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் இணைக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் மூலம் கொடுப்பனவுகள் அனுமதிக்கப்படவில்லை என்பதுடன், மாற்றமாக சம்பளக் கட்டமைப்பை மீளாய்வு செய்யுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. எனவே அந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை விஞ்சி நடவடிக்கை எடுக்க முடியாது. |
| (உ) 2018 பெப்ருவரி 15 ஆந் திகதிய இல 01/2018 எனும் வர்த்தக மற்றும் முதலீட்டு<br><br>சுற்றறிக்கையின் 1.9 (i) மற்றும் 3.4 பிரிவு | மேற்படி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு புறம்பாக அதிகாரசபையில் பணியாற்றும் உத்தியோகத்தரொருவருக்கு சலுகை அடிப்படையில் தீர்வை வரி அடிப்படையில் வாகன இறக்குமதி அனுமதிப்பத்திரமொன்றை வழங்குவதற்காக செயலூக்கமுள்ள சேவைக்காலத்தை கணக்கிடும் போது அந்த உத்தியோகத்தர் பணித்தடைக்கு உட்பட்டிருந்த 6 மாதக் காலப் பகுதியையும் செயலூக்கமுள்ள காலப் பகுதியாக கணக்கிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரைக்கு அமைவாக மேற்படி உத்தியோகத்தருக்கு தீர்வை வரி சலுகை அடிப்படையில் மோட்டார் வாகன- | கணக்காய்வு ஐய வினாவிற்கு பதில் அளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

மொன்றை இறக்குமதி செய்வதற்கான அனுமதி-ப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

**2. நிதிசார் மீளாய்வு**

2.1 **நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட இணைந்த நிதிக் கூற்றுக்கு அமைய மீளாய்வுக்குரிய ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடையும் ஆண்டுக்கான குழு மொத்த இலாபம் ரூபா. 4,339 மில்லியன் மற்றும் அதிகாரசபையின் இலாபம் ரூபா. 4,247 மில்லின் ஆகும். கடந்த ஆண்டில் குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் இலாபம் முறையே ரூபா.12,052 மில்லியன் மற்றும் ரூபா. 12,095 மில்லியன் ஆகும். அதனை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது குழுமத்தின் மற்றும் அதிகாரசபையின் நிதிசார் விளைவு முறையே ரூபா.7,713 மில்லியன் தொகை மற்றும் ரூபா. 7,848 தொகையில் குறைவடைந்திருந்தது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது அந்நியச் செலாவணி நட்டம் ரூ.மில். 9,123 இனால் அதிகரித்தது நிதிசார் விளைவு குறைவடைவதற்கு பிரதானமாக பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

2.2 **பிரதான வருமானம் மற்றும் செலவு விடயங்களின் செல்நெறி பகுப்பாய்வு**

i. கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமானம் ரூபா. 3,156,669,222 அதாவது 8.9% ஆல் மற்றும் வேறு செயற்பாட்டு வருமானங்கள் ரூபா. 4,653,276,542 அதாவது 67% ஆல் வளர்ச்சி அடைந்துள்ளது.

ii. 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வுக்குரிய வருடத்தின் நேரடி செலவுகள், நிர்வாக செலவுகள் மற்றும் வெளிநாட்டு நாணயமாற்று நட்டம் முறையே, 5.5%, 12% மற்றும் 416% ஆல் வளரச்சி அடைந்துள்ளது.

iii. மொத்த வருமானம் ஒப்பீட்டு ரீதியில் 2017 ஆம் ஆண்டு முதல் 34.02% ஆன செயற்பாட்டு இலாபம் 2018 ஆம் ஆண்டில் 40.19% வரை அதிகரித்திருந்தது. 2017 ஆம் ஆண்டிலிருந்து 27.51% ஆக காணப்பட்ட தேறிய இலாப வீதம் 2018 ஆம் ஆண்டில் 8.12% வரை குறைவடைந்திருந்தது. அவ்வாறே, நேரடி செயற்பாட்டு தேறிய இலாபம் வருமானத்தின் வீதமாக எடுத்து நோக்கும் போது 2017 ஆம் ஆண்டில் 19.43% ஆக இருந்ததோடு, அது மீளாய்வுக்குரிய வருடத்தில் எதிர்மறையாக 8.77% வரை குறைவடைந்திருந்தது.

iv. 2017 ஆம் ஆண்டில் நடைமுறை விகிதம் மற்றும் உடனடி விகிதம் முறையே 1.22:1 மற்றும் 1.20:1 ஆக இருந்ததோடு மீளாய்வுக்குரிய வருடத்தின் இறுதியில் அது முறையே 3.29:1 ஆகவும் மற்றும் 3.15:1 வரை படிப்படியாக வளர்ச்சியடைந்திருந்தது.

v. அதிகாரசபையின் ஒரு ஊழியருக்காக செலவு செய்யப்படும் பொதுவான செலவை கருத்திற்கொள்ளும் போது 2017 ஆம் ஆண்டில் ரூ. 1,768,164 ஆக இருந்த ஊழியர் செலவு 2018 ஆம் ஆண்டில் ரூ. 2,072,257 வரை வளர்ச்சியடைந்துள்ளது. ஊழியர் சம்பளம் மற்றும் மேலதிக நேரக் கொடுப்பனவுகள் அதிகரிப்பதற்கு இது காரணமாக அமைந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட ஆளணிக்கு மேலதிகமாக 1782 சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும், அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு (Operations) நேரடியாக தொடர்புள்ள பிரிவுகளின் 384 ஊழியர்கள் வெற்றிடம் காணப்பட்டது. அவ்வாறே அதிகாரசபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக நேரடி தொடர்பற்ற 15 பிரிவுகளில் 574 பேரின் மிகை காணப்பட்டது. எவ்வாறெனினும், 2018 ஆம் ஆண்டில் ஊழியர் மிகை காணப்பட்ட பிரிவுகளின் ஊழியர்களுக்காக ரூபா. 971 மில்லியன் தொகை மேலதிக நேர கொடுப்பனவு உட்பட ரூபா4,688 மில்லியன் தொகை ஊழியர்களுக்கு மேலதிக நேரக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | அனுமதியைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொழிற்பாட்டுப் பிரிவு, சிவில் பொறியியல் பிரிவு மற்றும் இயந்திரப் பிரிவு ஆகியவற்றில் நிலவும் ஊழியர் தேவைப்பாடுகளின் அடிப்படையில் வெற்றிடங்கள் நிலவும் பதிவிகளுக்கு ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளிலும் தற்போது உள்ள ஊழியர்களை அந்தப் பிரிவின் தேவைக்கு ஏற்ப மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | ஆளணியை பயனுள்ள சேவையில் ஈடுபடுத்தி மேலதிக நேரச் செலவுகளை குறைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ)அம்பாந்தோட்டை துறைமுக வளாகத்தில் குவிக்கப்பட்டுள்ள அதிகாரசபைக்கு சொந்தமான கட்டிக் கற்கள் (Crushed Aggregate) கன மீட்டர் 100,000 உம் கருங்கல் தூள் (Quarry Dust) கன மீட்டர் 11,250 உம் கூழாங் கற்கள் (Rock Boulders) கன மீட்டர் 90,000 உம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை நிர்மாணிப்பதில் தொடர்புபட்ட சீன ஒப்பந்தக்காரரின் உள்நாட்டுப் பிரதிநிதிக்கு இலவசமாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேற்படி பொருட்களின் ஆரம்ப விற்பனை விலையை | அம்பாந்தோட்டை துறைமுகத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது கட்ட நிர்மாணிப்பின்போது தேவையான கூழாங் கற்கள் துறைமுகத்திற்கு வெளியிலுள்ள குழியொன்றிலிருந்து எடுக்கப்பட்டது. மேலும், அந்த கருங்கல் குழி மகாவலி அதிகாரசபையின் அனுமதிபெற்ற ஒருவருக்கு சொந்தமாக உள்ளது. சைனா ஹாபர் இன்ஜினியரிங் கோபரேஷன் கம்பனி கூழாங் கற்களுக்கான அரசின் பங்கை, உரிமையாளரின் பெயரில் மகாவலி அதிகாரசபைக்கு செலுத்தியுள்ளது.<br><br>தூளக்கப்பட்ட இந்த கருங்கற்களின் எஞ்சிய பகுதிகள் துறைமுக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. | கருங்கல், கருங்கல் துள், கூழாங்கற்கள் போன்றவற்றை வேறு நிறுவனமொன்றுக்கு வழங்கும் போது பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

அடிப்படையாகக் கொண்டு பெறுமதியை கணக்கிடும் போது அண்ணளவாக அதிகாரசபைக்கு ரூ.பா 26,479,581 நட்டம் ஏற்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டது.
மேற்படி இலவசமாக கருங்கற்களை வழங்குவ-தற்காக பெற்றுக்கொண்ட பணிப்பாளர் சபையின் தீர்மானம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

மேலும் துறைமுக நிர்மாணிப்பின் பின்னர் அகழ்வின் போது பெறப்பட்ட கூழாங் கற்கள் அப்போதைய மாகம்புர துறைமுக முகாமைத்துவ (தனியார்) கம்பனி மூலம் (MPMC) அவர்களின் Crusher இயந்திரமொன்றினால் தூளாக்கப்பட்டு அந்தப் பகுதிகளையும் துறைமுக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது.

அதன் பின்னர் துறைமுக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்த கருங்கற்களை அகற்றுவதற்கு துறைமுக அதிகாரசபையினால் விலைமனு கோரப்பட்டு வெளி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்டது.

அந்த நடவடிக்கைகள் மேற்கொள்கையில் இந்த மூலப் பொருட்கள் வேறு தரப்பினரால் அதிகாரசபைக்கு அறிவிக்காமல் எடுத்துச்செல்லப்படுவதாகவும் அம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரின் மூலப்பொரு-ட்களும் அதனோடு எடுத்துச் செல்லப்படுவதாகவும் எங்களுக்கு அறிக்கையிடப்பட்டது.

அவ்வாறே சைனா ஹாபர் இன்ஜினியரிங் கோபரேஷன் கம்பனியினால் (CHEC) ஏற்புடைய மூலப்பொருட்கள் அவர்களுக்கு சொந்தமானதென துறைமுக அதிகாரசபைக்கு எழுத்துமூலம் அறிவிக்க-ப்பட்டுள்ளது. மேலும், அம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரினாலும் துறைமுக-த்திற்கு வெளியே கருங்கற்களை எடுத்துச்செல்வதை நிறுத்துமாறு எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி விடயங்களை அடிப்படையாகக் கொண்டு தனிப்பட்ட ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு வழங்கப்பட்ட அந்த கற்களை எடுத்துச் செல்லும் நடவடிக்கை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அவ்வாறே, அந்த நிறுத்துகை தொடர்பில் மாவட்ட

| | | |
|---|---|---|
| | செயலாளருக்கும் அறிவிக்கப்பட்டது. . | |
| (இ) 2011 ஆம் ஆண்டு இலங்கை சுங்கத்திற்கு அறிவிக்காது இறக்குமதி செய்யப்பட்ட 27 பாரந்தூக்கிப்பொறி தொடர்பில் சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 1,580 மில்லியன் தொகையிலான சுங்க அபராத தொகையினை குறைத்துக்கொள்வதற்காக சுங்க கட்டளைச் சட்டத்தின் 165 ஆவது பிரிவின் பிரகாரம் சுங்க விசாரணையொன்றின் தீர்மானத்திற்கு அமைய நிதி அமைச்சருக்கு மேன்-முறையீடு ஒன்றினை செய்ய முடியுமெனினும் அதிகார-சபையினால் அமைச்சருக்கு அவ்வாறானதொரு மேன்-முறையீடு சமர்ப்பிக்க-ப்படவில்லை. எவ்வா-றெனினும், இது தொடர்பில் கணக்குகளில் ரூபா.1,577.7 மில்லியன் நிபந்தனை பொறுப்புக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேற்படி விடயம் குறித்து அதிகாரசபை மேன்முறையீட்டு நீதிமன்-றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்-டிருந்ததோடு, அதன் பின்னர் மேன்முறையீட்டு நீதிமன்ற-த்தின் கட்டளைக்கு எதிராக மேன்முறையீடொன்று உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டிருந்தது. | அறிக்கையிலுள்ள விடயங்கள் சரியானவையாகும். | இறக்குமதி செய்யப்படும் அனைத்து பொருட்களும் சுங்கக் கூற்றில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஈ) இல PE/PS/JCTL/GEN/2018 மற்றும் 2018 ஏப்ரல் 24 ஆந் திகதியில் அதிகாரசபையின் தவிசாளரருக்கு பிரதியிட்டு துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சுக்கு அனுப்பப்பட்ட அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு அமைய அதிகாரசபைக்கு பூரண உரிமை உள்ள ஜயா கன்டேனர் டேர்மினல் கம்பனியிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பங்கிலாபமாக | இணங்கவில்லை. இந்தக் கடிதத்திற்கு இல FD/DF/02 எனும் 2018-07-26 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் பதில் அனுப்பப்பட்டுள்ளது. | பொதுத் திறைசேரியின் கடிதத்திற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ரூபா.56,299,347 பெற்றுக்கொண்டு அதிகாரசபை ஊடாக பொதுத் திறைசேரிக்கு அனுப்ப வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரையில் அது அனுப்பப்படவில்லை. | | |
| (உ) 2018 செப்டம்பர் 04 ஆந் திகதிய இல PE/EN/REV/REQ/2018 எனும் கடிதத்தின் மூலம் அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தினால் அரச தொழில் முயற்சிகளின் பங்கிலாப பங்களிப்பு ரூபா 350 மில்லியன் திரட்டு நிதியத்திற்கு வழங்குமாறு அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட போதிலும் அந்த தொகை அதிகாரசபையினால் அனுப்பப்படவில்லை. | இணங்கவில்லை. இலங்கை துறைமுக அதிகாரசபை சட்டத்திற்கு அமைய இலங்கை துறைமுக அதிகாரசபையை நிறுவும் போது அரசாங்கத்தினால் மேற்கொண்ட மூலதனத்தில் 8% என்ற உச்சவெல்லைக்கமைவாக உட்பட்ட வகையில் பங்கிலாபத்தினை வழங்க வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறெனினும், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கு பங்கிலாபத்தை செலுத்துவதிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதாக 2018.04.24 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறியத்தரப்பட்டுள்ளது. இலங்கை துறைமுக அதிகாரசபையினால் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்டங்களுக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகைகளை தீர்ப்பதற்கு இலங்கை துறைமுக அதிகாரசபையினாலேயே நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எனவே, இந்த விடுவிப்பு வழங்கப்பட்டுள்ளது. | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் கடிதத்திற்கு அமைய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.2 தொழிற்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை கையாளுவதற்கு பயன்படுத்தும் தளங்களில் ஆழம் (Draft) மீட்டர் 14.25 க்கு கூடிய கப்பல்கள் வரமுடியுமான ஒரே தளமான கொழும்பு சர்வதேச கொள்கலன் தளம் (C.I.C.T) மட்டுமாகும். அதன் கொள்ளளவு இருபது சம (TEU) அலகு 2.4 மில்லியன் ஆகும். 2018 ஆம் ஆண்டில் | இணங்குகின்றேன். கொழும்பு சர்வதேச கொள்கலன் தளம் (CICT) தனது உச்ச கொள்ளளவை விஞ்சிய வகையில் தனது செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு பிரதான காரணம் கவர்ச்சியான சந்தைப்படுத்தல் மூலோபாயங்களைப் பயன்படுத்தல் மற்றும் உற்பத்தித்திறனின் வளர்ச்சியையும் குறிப்பிட முடியும். | கொள்கலன் அதிகரிப்பு தொடர்பில் ஆய்வொன்றை மேற்கொண்டு எதிர்காலத்தில் நிகழ முடியுமான அதிக கேள்வியினை எதிர் நோக்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |

அந்த தளத்திற்கு ஆழம் மீட்டர் 14.25 க்கு கூடிய 308 கப்பல்கள் வந்துள்ளன. மொத்த கொள்கலன் அலகுகள் 2.6 மில்லியனுக்குக்கு கூடிய எண்ணிக்கை கையாளப்பட்டிருந்தது. அது உச்ச அளவை விஞ்சிய ஒரு நிலையாக அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க, 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது தளத்தின் கொள்கலன்களை கையாளுதல் 12% அதிகரிப்பு காணப்பட்டுள்ளது. எதிர்காலத்திலும் தளங்களின் சேவைக்கான கேள்வி அதிகரிக்கும் பட்சத்தில் கொழும்பு துறைமுக தளங்களின் சேவைகளை வழங்குவதில் சிக்கல் ஏற்படுமென அவதானிக்கப்பட்டது.

எவ்வாறெனினும், கொழும்பை விரிவாக்கும் கருத்திட்டத்திற்காக உள்நாட்டு வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட நிதியிலிருந்து கொள்கலன் அலகுகள் 800,000 இன் வருடாந்த கொள்ளளவு கொண்ட நிர்மாணிப்புக்கான செலவு ரூபா. 11,168 மில்லியன் தொகையிலான 18 மீற்றர் ஆழமான மற்றும் 440 மீற்றர் நீளமான கிழக்கு கொள்கலன் தளத்தின் நிர்மாணப் பணிகள் 2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அளவில் நிறைவுசெய்யப்பட்ட போதிலும், கப்பல் பொருட்களை கையாளுவதற்கு தேவையான கிரண்டி பாரந்தூக்கிப்பொறி உள்ளிட்ட உபகரணங்களைப் பெற்றுக்கொண்டு இந்த கொள்கலன் தளத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு 2019 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

சந்தைப்படுத்தல் மூலோபாயங்கள் ஊடாக கொள்கலன் வளாகத்தில் தரித்து வைக்கப்படும் காலத்தை (Dwell time) குறைத்து அதன் மூலம் அதிக எண்ணிக்கையிலாள கொள்கலன்களை வருடாந்தம் கையாளுவதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. உற்பத்தித்திறன் அதிகரிப்புக்கு அடிப்படைக் காரணம் யாதெனில், நவீனமயமாக்கப்பட்ட வளாகம், நவீன இயந்திரசாதனங்கள், கணினி கட்டமைப்புக்கள் மற்றும் மனிதவள முகாமைத்துவம் என்பவற்றைக் குறிப்பிட முடியும். CICT நிறுவனத்திடம் உள்ள கிரண்டி பாரந்தூக்கிப் பொறி 12 இலும் இரட்டை தூக்கி (Twin Lifter) ஆற்றல் உள்ளதோடு அதன் மூலம் ஒரே முறையில் 20 அடி கொள்கலன்கள் இரண்டை தூக்க முடியும். எனவே, உற்பத்தித்திறன் அதிகரிப்பு நிச்சயமாக ஏற்படும். எனவே, துறைமுக அதிகாரசபைக்கு சொந்தமான கொள்கலன் தளங்களுக்கும் மேற்படி நவீன திட்டங்கள் மற்றும் இயந்திரசாதனங்களை அறிமுகம் செய்வதன் மூலம் புதிய முதலீடுகளை பயனுள்ள வகையில் ஈடுபடுத்தி உச்ச உற்பத்தித்திறன் மட்டத்தை அடைந்துகொள்வதன் மூலம் வருடாந்த கொள்கலன் கொள்ளளவை அதிகரித்துக்கொள்ள முடியும்.

### 3.3 பயனற்ற அல்லது குறை பயன்பாட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபைக்குச் சொந்தமான கொழும்பு துறைமுகத்தில் உள்ள 6,400 மொத்த தொன் கொள்ளளவு கொண்ட பழைய எண்ணெய் தாங்கிகள் 10 2015 ஆம் ஆண்டு முதல் குறை பயன்பாட்டில் காணப்படுகின்றது. | இந்த எண்ணெய் தாங்கிகள் 10 உம் குத்தகை அடிப்படையில் வழங்கு-வதற்கு தேவையான அரசாங்க விலைமதிப்பு அறிக்கைகள் பெறப்ப-ட்டுள்ளன. குத்தகை அடிப்படையில் இந்த எண்ணெய் தாங்கிகளை குத்தகைக்கு வழங்குவதற்கு தேவை-யான கேள்வி மனு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு-வருகின்றன. 2018 ஆம் ஆண்டில் நாளாந்த அடிப்படையில் துறைமுக அதிகாரசபையினால் அனுமதிக்-கப்பட்ட கட்டணங்களின் படி வழங்கி ரூபா 29,961,157/= வருமானம் உழைக்கப்பட்டுள்ளது. | எண்ணெய் தாங்கித் தொகுதியை குத்தகை அடிப்படையில் வழங்கு-வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |